107

ஓம் பரப்பிரம்மணே நம:

சர்வசமய சமரஸ சதாசாரம்,

சமரஸம்.

என்னும்

சிறந்த தமிழ் மாதாந்த பிரசுரம்.

OFFICE OF THE REGISTR...
4 OCT 192

சாது குழவி.	அக்ஷய வருஷ ஆடி மீ ஜூலை மீ 1926 வரு	வயது மாதம் 2.

Published by

M. A. VARADARAJA MUDALIAR.

1926.

ஹநுமான் அச்சியந்திரசாலை, விழுப்புரம்.

ஓம்:

சமரஸம்.

சாது	அக்ஷய ஹு ஆடி திங்கள்	வயது. 2-மீ

வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். குறள்.

தங்க மணிவாசகம்.

சமரஸம்: உயர்வான மனுஷியஜன்மம் வாய்ந்தவர்களே! நீங்கள் சுகமனுபவிக்க வேண்டுமென்ற இச்சையுடையோரானால் துக்கத்தினின்றும் விலகிநில்லுங்கள். தண்ணீரென்றால் தாகம் தீருமா? ஔஷதமென்றால் பிணி நீங்குமா? அவைகளை உட்கொண்டாலல்லவோ தாகமும் பிணியும் தானேவிலகும். அதற்காக நீங்கள் சுகமே இங்குவா துக்கமே இங்குநில்லாதே யென்று சொல்லிக்கொண்டிருப்பது தகாதகாரியம். அதற்கான காரியத்தை யனுசரித்து நடந்துகொள்ளவேண்டும். அதாவது துக்கத்தையும் சுகத்தையும் சமரஸமாக கொள்ளவேண்டும். இவ்விதபுத்தி இலகுவில் ஒருவருக்கு உண்டாகாது. சாஸ்த்திரங்களையும் பத்திரிகைகளையும் வாசிக்கிறவர்களுக்கு தான் உண்டாகும். ஓர் கிராமத்தில் இப்படிப்பட்ட சமரஸ புத்தியுடையார் 5 பேர்வழிகள் கூட இல்லையானால் அவ்வூர் என்ன நிலைமையில்நிற்கும் சுடுகாடா? உயிர்களை கொள்ளைகொள்ளுகிறபாழும் புலிக்காடா என்றல்லவோ மேலோர் கூறுவர்.

எதிர்கால தீர்க்கதரிசனம்.

இனிவரும் எதிர்காலம் ஜனங்களுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் கொடுக்கக்கூடிய நல்ல காலமென்னலாம் வெகு சமீபத்தில் மேல்நாட்டைவிட இந்தியா கீர்த்தி பிரதாபத்தில் முதற்படியில் நிற்கும் என்று சில விஷயங்களால அறியக்கிடைக்கிறது. இப்பொழுது எங்குபார்த்தாலும் கீழ்வகுப்பினர்கூட கல்வியிலும் பத்திரிகை வாசிப்பதிலும் சிரத்தைகாட்டி வருகின்றனர், ஆச்சரியகரமாகவே ஓர் நல்லகாலம் இனி நடக்கப்போகிறது என்பது நிதர்சனம்.

OFFICE OF THE REGIST[...] 4 OCT 1[...]

வந்தேமாதரம்.

வந்தேமாதரம்: என்தாயை வணங்குகிறேன் என்றுபொருள். அதாவது பாரதமாதாவை வணங்குவேன் என்பது குறிப்புத்தொடர். பாரதமாதா யார்? எங்கே இருக்கிறாள் நான் வணங்க? என்று ஆச்சரியமாய் கேட்கிறார்கள். உலகத்திலுள்ள எல்லா பொருள்களும் ஆண்தன்மை பெண்தன்மை வாய்ந்தனவாக தமிழ் இங்கிலீஷ் கர்த்தாக்கள்கூறுகின்றனர். அவற்றுள் பூமி, ஜலம் நெருப்பு, காற்று, ஆகாசம் (பஞ்சபூதங்களுள்) பூமி, ஜலம் ஆகாசம மூன்றையும் பெண்ணாகவும், நெருப்பு காற்று இரண்டையும் ஆணாகவும், கூறியிருக்கின்றனர். பூமியை பூமாதேவி என்றழைப்பார். அதில் நமக்கு சொந்தமாகிய பாரதபூமியை பாரதாதேவி, பாரதமாதா வென்றழைப்பது இந்துமதத்தின் இலக்ஷணை. அதனால் பாரதமாதாவை வணங்குகிறேன் என்பதனால் பூமியை வணங்குவதற்கு ஒருவன் காரணமில்லை. அதன்பொருள் பாரதநாட்டிலுள்ள என் சகோதரரை வணங்குகிறேன் என்பதே. உலகம் சிறிக்கும் என்பதில் உலகத்திலுள்ளவர்கள் சிரிப்பார்கள் என்பதைப்போலும், உலகத்தின்கொடுமை சகிக்கமுடியவில்லை என்பதில் உலகத்திலுள்ள மனிதர்களின் கொடுமை சகிக்கமுடியவில்லை என்பதைப்போன்ற தொக்கிநிற்கும் பதங்கள். ஒவ்வொரு ஜீவனும் மண்ணிலிருந்து பிறக்கின்றன மறுபடியும் மண்ணுக்கே திரும்புகின்றன. ஆதலால் மாதாவாக ஆன்றோர் கூறியிருக்கின்றனர். ஆகையால் ஒவ்வொருவரும் வந்தேமாதரம் அதாவது என் சகோதரரை வணங்குகிறோம் என்று கோஷிப்பீர்களாகில் உங்களுக்குள் மனுஷத்வேஷம் எவ்வாறு உண்டாகும்.

....

அக்கிரமங்கள் செய்கிறவன் எவனும் சத்தியத்தை பகைக்கிறான். தன் குற்றங்கள் வெளிக்கு வாராதிருப்பதற்காக நல்லோர் சபையைநாடுவதில்லை. நியாயஸ்தலத்தைவெறுத்து இடறுதலடைகிறான். ....

தன்மனதில் கபடுள்ளவன் எவனும் மேலோங்குவதில்லை. அவன் மனஞ்சலித்து தேகமும்சரித்து பட்டழிவான்.

....

விசாலநோக்கமும், பெருந்தன்மையும் வெள்ளைமனதுள்ளவர்களுக்கு உலகத்திலுள்ள மனிதர்களெல்லாம் வசியமாவார்கள், அடங்கிநடப்பார்கள் பணிவிடையும் செய்வார்கள்.

தாவர சாஸ்திரத்தின் உண்மை.

தன் ஆயுளுக்குள் 5விருக்ஷங்களையாவது வைத்து பயிரிடாதவன் மறுஜென்மத்தில் பிச்சைக்காரன் ஆவான் என்பது தாவர சாஸ்த்திரத்தின் உண்மை.

ரஸாயன சாஸ்த்ர துணிபு.

ஏரிகளிலாவது தாவுகளிலாவது பிரதிதினமும் ஐந்து கவடி மண்எடுத்து கரையில்போடுகிறவன் அந்தஜன்மததிலோ அடுத்தஜன்மத்திலோ அவன் நிலங்களெல்லாம் வளங்கள் பெருகும் அவன் கிணாாவது ஏரியாவது தோண்ட ஜலம்பாயச்சாமல் வற்றாத நீரூற்றுகளின் வளப்பத்தில் அமைக்கப்படுவான்.

படிப்பின் தைர்யம்.

ஒருவன் தைரியமாய் ஒருவிஷயத்தில் துணிவதற்கும் ஒருவனை எதிர்த்துக்கொண்டு வல்லமைபேசுவதற்கும் அவனுடைய பணமேகாரணம். தன்னை ஒருவன் அடித்துவிட்டாலோ தானும் அடித்து கோர்ட்டேறி வழக்கு தொடுப்பதற்கும் அவன் பணமே காரணமாயிருக்கிறது. பம்பாய் இருப்புப்பாதையில் ஒரு வக்கீல் பிரயாணம்செய்தார். அவருக்குப் படிப்பிலும் பணத்திலும் என்ன குறைவு அதனுல் அவர்எப்பொழுதும் தைர்யசாலியாகவே யிருந்தார். இவர் ஏறியிருந்த வண்டியில் ஏற்கனவே அதிக ஜனங்களிருந்தும் மறுபடியும் அதிகஜனங்களை ஏற்றினர்கள். இந்த வக்கீல்ஆக்ஷேபித்தும் பயன்படவில்லை வண்டியும்புறப்பட்டு விட்டது. உடனே வக்கீல் சங்கிலியை இழுத்தார். வண்டி நின்றதும் கார்ட் ஓடிவந்தார். ஏன் சங்கிலியை இழுத்தீர் என்று கேட்க, ஜனங்களின் நெருக்கம் சகிக்கமுடியவில்லை. ஜனங்களில் சிலரை வேருெருவண்டியில் ஏற்றுமென்றார். கார்ட் பேசாமல் சென்றுவிட வண்டியும் புறப்பட்டது. உடனே இவர் மறுபடியும் சங்கிலியை இழுத்தார் உடனே வண்டிநின்று கார்ட்வந்து இனிமேல் நீர் இப்படிசெய்தால் உம்மை பிராசிகூஷன் செய்யப் படுமென்று எச்சரித்து சென்றார். வண்டி புறப்பட்டது. மூன்றும் தடைவையும் அப்படியே இழுத்தார். வண்டியிலுள்ள அதிகஜனங்களை வேருெருவண்டியில் ஏற்றவேண்டுமென்று சொல்ல கார்ட்டும் அப்படியே செய்துவிட்டுசென்றார் பணமும் படிப்புமிருந்தால்தான் இக்காலத்தில் நியாயபரிகாரம் பெறலாம். (தி-அ)

....

வருஷமொன்றுக்கு இங்கிலாந்தில் விற்பனையாகும் சாராயத்தின் மதிப்பு 160கோடி ரூபாய்கள். அதனுல் கவர்ண்மெண்டுக்கு லாபம் 35கோடி ரூபாய்கள் இதை இழந்தாவது குடியை நிறுத்தி விட வேண்டுமென்று இங்கிலாந்தில் பலர் கிளர்ச்சி செய்கிறார்கள்.

காலமறிந்த தர்மம்.

திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டத்திலிருக்கும் சுப்பிரமண்யபிள்ளை யென்பவர் 60ஆயிரம் பொறுமான தமது ஆஸ்தி

முழுவதும் அவ்வூரிலுள்ள கார்னேஷன் ஹைஸ்கூலுக்கு சிலகாலத்துக்கு முன்பு உயில் எழுதிவைத்திருக்கிறார். இவர் தர்மம் மேலோர்களால் பாராட்டத்தக்கது

விசேஷ வர்த்தமானங்கள்.

மகாத்மாகாந்தியடிகள் சென்றமாதம் அயர்லாண்டில் நடைபெற்ற ஸ்திரீகள் கூடினமீட்டிங்கில் தானும் ஒருவராக வீற்றிருந்தார்.

....

திருச்சினாப்பள்ளியில் கடைத்தெருவில் தீ பிடித்து வெந்து விட்டதாகவும் 1000கணக்கான ரூபாய்கள் சேதமேற்பட்டிருப்பதாக தெரிகிறது.

....

தஞ்சாவூர் ஜில்லா திருவாரூர் மஹாரதோத்ஸவத்தில் தேர் ஊவரை சுற்றிபிரகாரம் வருகையில் ஓர் இடத்தில் தங்கியிருந்தது. அகஸ்மாத்தாய் நெருப்புபிடித்து முழுதும் வெந்து சாம்பலாகி விட்டது சமீபத்திலிருந்த இரண்டு வீடுகளும் பற்றி எரிந்து விட்டதாம். இந்தஊர் தேர் தென்னிந்தியாவில் பிரதானமானதும் உயரமுமானது. இதைப்பற்றி ஜனங்கள் திருவாரூர் தேரழகுஎன்று கூறுவது வழக்கம் தென்னிந்தியாவிற்கு இதனால் பெருத்த நஷ்டமேற்பட்டிருக்கிறது. இவைகளுக்கு காரணம் மிகவும் ருசிகரமான வியாசம் பின்னர் வெளியாகும்.

....

தென்னார்காடு ஜில்லாவில் திண்டிவனத்தில் 25-வீடுகளுக்கு மேல் தீக்கிரையாகிவிட்டது. அவ்வூர் பஞ்சாயத்தார் வீடிழந்த ஏழைமக்களுக்கு சில தினங்கள் வரைக்கும் உணவும் வீடுகட்டுவதற்கு சாமான்களும் கொடுத்ததாக தெரிகிறது. இந்த ஜில்லாவில் 20க்குமேற்பட்ட கிராமங்களில் தீவிபத்து ஏற்பட்டு உடனே அமைக்கப்பட்டிருக்கிறது.

....

ரங்கூன் பிரதேசங்களில் புசல்காற்றினால் பலமானசேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. வீடிழந்த ஏழைகளுக்கு அநேக பணக்காரர் ஆயிரக்கணக்காக உதவி செய்திருக்கின்றனர்.

....

இதாலியாவில் பூகம்பம்உண்டாகி 5-நிமிஷவரையில் பூமி அதிர்ந்ததாம், சில கட்டடங்கள் கிலகமான நிலையை யுற்றன 4, 5 பேருக்கு மரணம் நேரிட்டிருக்கிறதாம்.

....

முல்டான் முதலிய இடங்களிலும் பயங்கரமான பூமி அதிர்ச்சி இம்மாதம் உண்டானதாக தெரிகிறது சில இடங்களில் பூமியில் வெடிப்புகள் காணப்படுகின்றனவாம்.

நன்னிலம் தாலுக்காவிற்கு சமீபத்தில் 35-வயதுள்ள ஓர் ஆண்மகனுக்கு 3-வயதுள்ள பெண்குழந்தையை கலியாணம் செய்துகொடுத்தார்கள். தாலிகட்டும்போது குழந்தை விளையாடிக்கொண்டிருந்ததாம். முகூர்த்தம் முடிந்து மாமியார்வீட்டுக்கு விருந்துண்ணபோயிருக்கையில் கல்யாணமுடிந்த ஏழாம்நாள் புருஷன் அகஸ்மாத்தாய் இறந்துவிட்டாராம். என்னபரிதாபம் பால் குடித்த குழந்தைகூட தாலி கழட்ட காலமாயிருக்கின்றதே?

....

சென்றமாதம் சில இடங்களில் தாங்கமுடியாத உஷ்ணத்தினால் அநேக உயிர்களுக்கு சேதம் ஏற்பட்டது. புசல்காற்றுகளாலும், பூமி அதிர்ச்சியாலும், நெருப்பாலும் அதிககஷ்டமும் உயிர்சேதமும் உண்டாயிருக்கின்றன. சமீபத்தில் பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் இரவும் பகலும் விடாமல் மழை பெய்து வெள்ளப்பிரளயமாயிருக்கிறதாம். (மித்திரன்).

ஒற்றுமை.

வாழ்விற்கு ஒற்றுமையும் தாழ்விற்கு வேற்றுமையும் காரணங்களாயிருக்கின்றன. உயிர்களெல்லாம் ஒற்றுமையினால் மேம்பாடடைகின்றன. ஒற்றுமையின்மையினால் தாழ்வுறுகின்றன. இதைப்பற்றியன்றோ "சேர்ந்துவாழ்வதே சிறந்தவலிமை" என்னும் மூதுரை வழங்கிவருகின்றது.

கல்வி கேள்விகளாலும் சாஸ்த்ர ஆராய்ச்சியிலும் மேம்பாடடைந்த பெரியோர்கூட்டம் பொதுஜன நன்மைக்காவும் தர்மத்தை நிலைநாட்டவேண்டி ஒன்றுபடுவது ஓர்வகை. மூர்க்காவேசமுள்ளவர்கள், கல்வி கேள்வி வாசனைஅற்றவர்கள் முறட்டுத்தனமாக பிறருக்கு தீங்குசெய்ய வேண்டுமென்றாவது, அல்லது தாங்கள் செய்வது தவறு தீங்கிழைக்கக்கூடிய காரியமென்றாவது, ஆலோசித்கரியாமல் முரட்டுத்தனமாய் ஒன்றுபட்டு செய்யும் காரியங்கள் மற்றொருவகை. ஒற்றுமையின் மேன்மையினால் மேற்கூறிய இரண்டு வர்கத்தவரும் ஜெயத்தையே ய[illegible]க் கூடும். ஆனால் மூர்க்கருடைய ஜெயபலம் சீக்கிரம் வேறுபட்டழியும். நூறாண்டுபழகினும் மூர்க்கர்கேண்மை நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாதே என்பது பழமைமொழியன்றோ! அறிவாளர்களுடைய ஜெயமும் செய்கைகளும் நோக்கங்களும் உலகு உள்ளவரையில் மங்காது. இனி.

ஒற்றுமையினால் ஜெயம்பெற்ற சிலரை கவனிப்போம் ராவணன் இரணியனைப்போன்ற ராக்ஷஸகுழாங்கள்தேவர்களையும்ஜெயித்து அடிமைப்படுத்தி வாழ்ந்தார்களல்லவா? ஜன சமூகத்தில் தாழ்ந்தவர்களாகிய கொள்ளைக்கூட்டத்தின் துர்ஜனசங்கங்கள்

ஒன்றுபட்டு அரியபெரிய காரியங்களை யெல்லாம் சாதித்து விடுகின்றனரல்லவா? ஆனால் இவர்கள் ஜெயத்துக்கும் பலத்துக்கும் உடனே கேடுசூழ்ந்து பட்டழிவது உலகம் சிரிப்புக்கிடமான காரியங்களாய் நடைபெறுகின்றன.

பூமியின் க்ஷேமத்தின் பொருட்டும் உழைக்கக் கூடிய வர்க்கத்தவர், பாண்டுபுத்திரர்கள், தசரதபுத்திரர்கள், அக்பர், பேபர் முதலியவர்கள் ஆங்கில அரசாங்கத்தினரும் அப்படிப்பட்டவர்களே. இவர்கள் ஒற்றுமையினால் மகா கஷ்டங்களை சகித்து செய்துள்ள காரியங்கள் இன்றைக்கும் போற்றப்படுகின்றன வன்றோ? ஜப்பான் மேல்நாட்டு வல்லரசுகளை வென்றதும் சைனு மேல்நாட்டின் கூட்டுறவை வெறுத்திருந்ததும். ஆங்கிலேய அரசு உலகமெங்கும் பரவியதும், சமீபத்தில் ஜர்மெனி உலகத்தையே ஆள வேண்டுமென்று நினைத்ததும் ஒற்றுமையின் பலத்தாலன்றி வேறென்ன?

பூர்வகாலத்தின் இந்தியாவின் வனப்பை நோக்குங்கள்! அக்காலத்து அதற்கு உன்னத நிலைமையும் உலக விவகாரங்களில் மூத்த நிலைமையும், உரிமையும் அதற்கிருந்தது. நிர்தனம் புரியும் கல்வி நாகரீகங்களெல்லாம் இந்திய கல்வி கடலிலிருந்து உலகமெங்கும் பாய்ச்சப்பட்டன. நாகரீகத்தில்சிறந்த பெரியோரே பிராம்மணர்களாய் விளங்கியதால் வேதத்தையும் உலகானுபவங்களையும் உண்டு ஆடம்பர வாழ்க்கையின் பலன் விசேஷித்திராததுகண்டு கடவுளை வழிபடும் பிரபந்தகோஷ்டிகளாய், எண்ணிறந்த வழிகளாலும் கடவுளை பாடி ஆர்ப்பரித்தனர். கடவுள் பக்தி எப்படி கொண்டாடப்பட்டதோ அப்படியே சன்மார்க்கமும். நல்லொழுக்கமும், சதாசாரங்களும் சத்தியமும் குடிகொண்டிருந்தன. சமரசபாவம் அக்காலத்து பிராம்மணர்களின் மனதிடையே ஊசலாடி தூங்கும். உலகம் நடைபெறுவதை வேண்டி வெளிச்சடலத்துக்காக சிலமதிப்பும் கௌரவமும்,உயர்வு, தாழ்வு முதலியனவற்றை நிர்மாணித்திருக்கிருக்கின்றனரே யன்றி ஆத்தும உலகத்தை சமரஸமாகவே பாவித்து வந்துள்ளார்கள் இவைகளை சாஸ்த்ர ஆராய்ச்சியாளரின்றி மற்றயர் நம்பதுணியார். பிறர்பொருளைக் கவரவோ கௌரவத்தையும் ராஜ்ஜியத்தைபும்விட்டு துறத்தவோ அவர்கள் ஒற்றுமையை நிலவச்செய்யாமல், தீங்கற்றதும், கீர்த்தியை விளைவிக்கக்கூடிய காரியங்களில் ஒன்றுபட்டு வாழ்ந்திருந்தனர். அவர்கள் பிரிவினைகளெல்லாம் யார் பக்தியில் முந்துகின்றனர், தர்மத்தை யார் அதிகமாய் கையாடுகின்றனர். எந்த கக்ஷியினருக்கு கீர்த்தியும் ஜனப்பெருக்கும் அதிகமுள்ளதென இவ்வாறு சன்மார்க்கங்களில் போட்டி போட்டு பிரிவுபடுத்தியிருந்தனர்.

வெகுகாலத்திற்கு பின்னர் வேறு பலமதங்கள் மேல்திசையிலிருந்து இங்கு தலைகாட்டத்தொடங்கின. அக்காலமுதல் மதவிவாதமே ஜனங்களுக்கிருக்கும் பரஸ்பர சிநேகத்தை குலைப்பதாயிருந்தது, உலகத்தில் சரித்திர போக்குள் முதலாவது கிறிஸ்துமதமே ஜன ஐக்கிய கட்டைதகர்த்தது. பிறகு இஸ்லாமதமும் அதில் பங்குகொண்டது. இவ்வாறே ஒருமதத்திற் கொருமதம் தன் மதமே உயர்ந்தது என்றும் தான் வழிபடும் கடவுளே உண்மையென்றும் தான் அனுஷ்டிக்கும் வழக்க ஒழுங்கங்களே மேலானதென்றும் பேசி, மனக் குழப்பத்தையும் வைராக்கியத்தையும் தூண்டிவிட்டன. இந்துமதத்தின் நாகரீக மகிமையாய் விளங்கி வந்த பிராம்மணர்கள் இந்துமதத்தின் கருத்துகளையும், வேத சாரங்களையும் கீழ்மக்களுக்கு கற்பிக்கவாவது அவர்களை மேலான வளர்ச்சிக்கு கொண்டுவருவதிலாவது சிரத்தையில்லாமலிருந்து விட்டதினால் சாஸ்திர பூர்வமறியாத பாமரமக்கள் இந்துமதமல்லாத பல மதங்களுக்கு துணைப்போந்தனர். பிறகு அவர்கள் ஏதோ தாங்கள் கற்றுக்கொண்ட நவீன முறைகளைக்கொண்டு ஜனங்களிடைமனப்பிரிவுகளை வகுத்தனர். இதனோடே மேல்நாட்டு அரசாக்ஷிமுறைகளும் நாகரீகங்களும் இந்தியமாதாவின் கழுத்தை இறுக்கி பிணைத்துக்கொண்டன.

காலக்கிரமத்தில் நவீன நாகரீகத்தில் மிகுந்த மேல்நாட்டாருக்குள்ளேயே பொதுப்பான்மை விசேஷித்தது “பெஞ்சிய மின் டிஸ்டிரேலி” இங்கிலாந்தின் முதல் மந்திரியாகி “லார்ட் பீகன்ஸ்பீல்ட்” என்றழைக்கப்பட்டார். அவர் ஹிருதயத்துள் மேல்நாட்டாரும் கீழ்நாட்டாரும் சகலரும் சமரஸமாகவே விளங்கின. அதன்படியே பிரிட்டிஷ் ஜன சமூகத்தை நடத்திவந்தார். அவர் கீழ்த்திசை மனக்கற்பனைகளை ஆழ்ந்து அறிய ஆவலுள்ளவர் அவர் மனம் எப்பொழுதும் கீழ்த்திசை ஜனங்களின் மனோதங்களில் பிரயாணம்செய்து கொண்டிருக்கும். அப்படிப்பட்டவர் பிரிட்டிஷ் மகாராஜாவுக்கு “இந்திய சக்கிரவர்த்தியென்கிற சிறப்பான பட்டத்தை பிரிட்டிஷ் ஜனங்களது கப்பெண்ணத்தையும், ஜனநாயக உணர்ச்சியையும் பாராமல் சூட்டுவித்தபோது, அதாவது ராஜமகுடத்துடன் ஏகாதிபத்திய மகுடத்தை சேர்த்ததினத்திலே அவர் சொன்னதாவது உலகத்து ஜனசமூகங்கள் மாறிக்கொண்டு வருவதால் ஆசியாவும் ஓர் உற்றகாலத்தில் மறுபடியும் ஏகாதிபத்தியம் பெறலாமென்றும் அந்த ஏகாதிபத்தியத்துக்கு அடங்காத் தன்மையுள்ள மேற்றிசையாயிராமல், ராஜவிசுவாசமுள்ள கீழ்த்திசையாய் தோன்றலாமென்றும் ஏகாதிபத்தியம் இயற்றும் சக்கிரவர்த்தியின் சிம்மாசனம் வடசமுத்திரத்தில் ஒரு சிறுதீவில் நாட்டப்பட்டிருப்பது போய் இந்தியாவென்னும் பெரியதேசத்தில்

நாட்டப்படலாமென்றும் வாதித்தார். இதனை மகாராணியாரும் இது சம்பந்தமான சில பிரசினைகளை வெளியிட்டுள்ளார்.

இவர்களைப்போன்ற சமரஸ பாவமுள்ள பலஆங்கில பிரமுகர்களும் மேல்நாட்டு மேலோர்களும் இந்தியாவின் முன்னேற்றத்தைபற்றியும் சுயராஜ்யமடைவதைப்பற்றியும் ருசிகரமான பிரசங்கங்களும் நிகழ்த்தினதுமன்றி பத்திரிகைகளில் எழுதியும் வந்தார்கள். காலக்கிரமத்தில் இந்தியாவில் கல்வியினால் முன்னேற்றம் பெற்ற வர்க்கத்தவர் சுயவரசைபெறுவதில் ஆர்வமும் அவாவு மேலிட்டவர்களாய் பலர் இந்தமதங்களின் வைதீக முதலியவைகளையும் துறந்தனர். பலர் இநத தர்மங்களைவிடுத்து பரபரப்புடன் சுயராசியலையடைய அடிகோலினர். ஆனால் இந்த சந்தர்ப்பம் நிறைவேறுவதில் சில அசம்பாவிதங்கள் பல தோன்றி தாமதப்பட்டபோதிலும் அந்த பெரிய முயற்சியானது சுயவராசியவின் அடிபீடத்தையாவது ஸ்தாபிக்காமல் விடவில்லை. சுயவரசி தன் சுபரூபத்தை எடுக்கிறதற்கு சில காரணங்களுள. இந்துங்களில் பெரும்பாலோர் கல்விவாசனையே கிடையாது. தேசப்போக்காவது, சரித்திரப்போக்காவது, வேத ஆராய்ச்சியாவது அறியாத ஜனங்கள் பெரும்பாலோர்கள் இவைகளையறிந்த புந்தர்கள் அரசாங்கமண்டபத்தின் தூண்களாய் நின்றுவிட்டனர். வெகு சிறுதொகையினரால் சுதேசகிளர்ச்சி செய்யபட்டதினால் பாமர ஜனங்களின் உதவி கோரப்பட்டது. அதை நடத்தின தலைவன் முக்காலத்தையும் கூர்ந்து அக்கிளர்ச்சியை ஆரம்பித்தபோதிலும் அதனை அனுசரிப்பார் மனதிடமற்றவர்களானதால் இடையிடையே பல தவறுதலுக்குள்ளாகி அக்கிளர்ச்சியின் வேகம் அடங்கி நின்றது. அதிலிருந்து ஓர் விழிப்பு அனைவருக்கும் தோன்றலாயிற்று எங்கும் பல புதிய உணர்ச்சி புதிய ஊக்கம் தோன்றலாயின. அதன்பயனாக பல கக்ஷிபேதங்கள் எழுந்து விளையாடுகின்றன. ஓர்கக்ஷி சாமோபாயத்திலாவது ஓர் கிளர்ச்சிசெய்து சுயவரசை அடைய வேண்டுமென்று ஊர்ந்துகொண்டேயிருக்கின்றது. ஆனால் அதற்கு பலகக்ஷிகள் இடையூறாகவே தோன்றுகின்றன.

தற்கால இந்தியாவின் வாழ்வு உலகத்து சரித்திரங்களில் மிகவும் சிறப்புவாய்ந்ததும் பொறுமையோடு எல்லா கக்ஷிகளையும் ஒன்றுபடுத்தி காரியசித்தி பெறவேண்டிய அம்சங்களாயிருக்கின்றன. எல்லாதேசமும் இந்தியா சுயவராசியலையடையும் பொருட்டு என்னென்ன முறைகளை கையாளப்போகிறது பார்ப்போம் என்று அதன் அறிவை அளக்கும் கருவிகளாய் வியப்புடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. அந்தோ! பாவம் அவர்கள் என்செய்யமுடியும். அவர்கள் நிலைமையோ திண்டாட்டத்திலிருக்

கும்பொழுது அவர்கள் இந்தியருக்கு எவ்வித ஒற்றுமையை உண்டாக்க வல்லவராவார்கள்- மேல்நாட்டு நாகரீகப்போக்குபடி உலகத்தில் ஒற்றுமை சமாதானத்தை விளைவிக்காமல் கோரமான யுத்தமுறைகளை யுண்டாக்கு முறைகள். இனி இந்தியா முறையாக அனுஷ்டிக்கவேண்டிய ஒற்றுமையும் அதனால் எதிர்காலத்து அடையும் அதின் வாழ்வின் நிலைமையும், மாறிக்கொண்டுவரும் மேல் நாட்டு ஒற்றுமையாயிராமல் பண்டைகாலத்தின் தத்துவ ஆராய்ச்சியில் அது எவ்வளவு உனகளாவிய பெருமையை யடைந்ததோ, அப்படியே ஓர் பெரும்ஜனமாகி ஒற்றுமையின் அடிப்படையே ஸ்தாபிக்கவேண்டும். அது உலகத்துமக்களால் மதிப்பிடக் கூடியதாயும் அவர்களுக்கும் உதவக்கூடிய முன் மாதிரியாகவு மிருக்கவேண்டும் இப்பொழுது மேல்நாட்டிலும் கீழ்நாட்டிலுள்ள சில சகோதிரர்களும் முக்காலத்தை கூர்ந்து கவனித்து பாராத சில காலிகளும் கேலிதனமான பத்திரிகைகளும் இந்தியாவின் கக்ஷி பிரிவுகளுக்கும் மதஜாதி பிரிவுகளாதும் கலவரப்பட்டவர்கள்.

(தொடரும்).

கிராம நிர்மாணவேலைகள்.

பஞ்சாயத்து சட்டங்கள்: பொது விதிகள்.

மதங்கள்:—ஒரு கிராமத்தில் வசிக்கும் பல மதஸ்தர்களுக்கும சுக துக்கங்கள் ஒன்றே ஆதலால் இரண்டொரு விஷயங்கள்` தவிர பெரும்பாலும் ஒரு அனுஷ்டான முறையைத்தான் கைக்கொள்ள வேண்டும். விவரம் பின்னர்தொடங்கும்.

ஜாதிகள்:—இவ்வுலகின்கண் பல ஜாதிகளிருந்த போதிலும் அஹிம்சை முறையில் எல்லோருக்கும் ஒரே ரீதியும் பரிகாரமும் தேடவேண்டும். ஜாதி பிரிவுகள் தொழிலைப்பற்றியும் சுகாதாரத்தைப்பற்றியும் ஏற்பட்டுள்ளதாக 1924வரு ஜனவரிமீ காக்கிநாடாவில் கூடிய காங்கிரஸ் பிரபலமான பிராமணர்கள் தீர்மானித்துள்ளார்கள் ஆகையால் ஜாதிவாரியென்று சொல்லும் ஆக்ஷியோ வேறு பிற காரியங்களோ கலகத்தையும் வழக்கையும் உண்டு பண்ணி ஜனநிர்மாண முறையைக் குலைத்துவிடும் என்பது கல்லின் மே லெழுத்துப்போல் தெரிந்துணரவேண்டும்.

பஞ்சாயத்து ஸ்தானிகர்கள்:—1. ஐந்து முதல் பதினைந்து பேர்களடங்கியகூட்டமே பஞ்சாயத்துக்கு ஆதாரமானது. பெரும்பான்மைபடித்தவர்களும் சிறுபான்மை தனவந்தர்களும் ஏழைகளும் இருக்கவேண்டும். ஜாதிவாரி பிரதிநிதிகள் அவசியமில்லை

ஆனால் மௌடீகமான வகுப்புகளில் விவகாரங்களைத் தெரிந்துகொள்ளும்படி நீண்டாதவர்கள் தாழ்ந்தஜாதியார்களையும் சம நிலைக்கு வரும்வரையில் கட்டாயமாக சில நபர்களைத தெரிந்துக்கொள்ளவேண்டும். பஞ்சாயத்து கூட்டங்களில் பாதி மேலான நோக்கமுள்ளவர்களாகவும் பாதி மௌடீகர்களையும் சேர்த்து வைத்தால்தான் நியாயம் தெரிந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.

பஞ்சாயத்து ஸ்தானம் பெற்றுள்ளவர்கள் சாந்தகுணம் ஜீவகாருண்யம் இளகினமனது நியாயவாதம் பிறர்நலங்கோரி உழைக்கும் குணமுள்ளவர்களாயிருத்தல் வேண்டும் அப்படிப்பட்டவர்களையே தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். நீண்ட விபரம் பிறகு வரும்.

2. பள்ளிக்கூட ஸ்தாபனங்கள்:—கிராம ஆக்ஷிக்கே மூலமாயுள்ளது. ஐந்துசதுரமைல் அல்லது இரண்டுமைல் தூரத்துக்கு மேற்படாதகிராமங்களுக்கிடையே தேசிய கலாசாலையை அமைத்துக்கொள்ளவேண்டும் அப்பாடசாலையில் குறைந்தது ஏழு வகுப்புகளும் ஏழு உபாத்தியாயர்களும் இருந்துவா வேண்டும், எவராலும எதிர்க்கப்படாத சமரஸ சன்மார்க்க சதாசாவிதிகளுள்ள புத்தகங்களையும் நூல்களையும் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும், தற்போழ்து கிராமத்திலிருக்கிறவர்களைவிட கல்வியில் இவர்களே தேர்ந்திருக்கிறபடியால் இவர்கள் பஞ்சாயத்தாருக்குதவியாயிருந்து கிராம பரிபாலன எல்லா காரியங்களையும் பள்ளிக்கூடம் ஒழிந்தவேளையில் நடத்தவேண்டும், பொதுவாய் தாலுக்கா அதிகாரிகளுக்கு நிர்வாக விஷயங்களுக்கு இவர்களே பதில்சொல்லவேண்டும், கிராம சுகாதார விஷயங்களும் இவர்கள் பார்வையிலேயே விட்டு விடவேண்டும், ஆனால் பஞ்சாயத்தார் அனுமதிகேட்டே ஒவ்வொருகாரியமும்செய்யவேண்டும், பள்ளிக்கூடம் பிரதிதினம் காலை 5-மணிமுதல் 10-மணிக்குள்ளாக முடிந்துவிடவேண்டும். இடையில் 30-நிமிஷம் அவசியமானால் ஓய்வுகொடுக்கலாம். பத்துமணிக்கு மேற்பட்டு பிள்ளைகளெல்லாம் தங்கள் தாய் தந்தையருக்குதவியாக ஆடுமாடுகளைப் போஷிப்பது பயிர்த்தொழில்களில் உதவிசெய்வது முதலிய வேலைகளில் ஈடுபடலாம். இப்படிச்செய்வதால் தேகாப்பியாசம்: அவர் காலத்தை கொள்ளைகொள்ள வேண்டியதில்லை. அவசியமானல் மாதமொருமுறை சுதேச அல்லது பரதேச விளையாட்டுகளை அவர்களுக்குக் களிப்புண்டாம்குபடி கற்பிக்கலாம். சில ஏழ்மைக் குடிகளில் சோந்தப்பிள்ளைகளைவிட மற்றவர்கள் பொறுப்பாக குடும்

பங்களின் பொருள்களைக் கவனிக்க மாட்டார்களாகையால் இப்படி பாதிவேளை பள்ளிக்கூடம்வைப்பது இரண்டு விஷயங்களும் நிறைவேற சந்தர்ப்பம் கிடைக்கிறது. தவிர படிப்பை விட்டவுடன் என்னவேலையில் அமருவது எப்படி காலத்தை கழிப்பது என்று ஆலோசிக்கக்கூடிய புத்திசுவாதீனமில்லாத மாணவர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் நேரிடாது. 2-வது 3-வது வகுப்பிலேயே அவர்களின் புத்தியையும் திறமையையும் கண்டுபிடித்து அவர்களுடைய தொழிலும் ஸ்திரப்படுத்தி அத்தொழிலுக்குரிய சாஸ்திர பயிற்சியே அதிகமாய் கற்கவேண்டும் மற்ற விஷயங்களெல்லாம் பொது அறிவுக்காகவே கற்பிக்கப்படவேண்டியதாயிருக்கவேண்டும். நீண்ட விபரம் பின்னர் தொடரும்.

பயிர்த்தொழில் ஸ்தாபனங்கள்:—3. பயிர்த்தொழில் முக்கியமாக நடைபெறுவதற்கு அவசியமாக ஊர்பொதுகிடங்கு இருக்கவேண்டும். இது ஒவ்வொரு கிராமத்திற்கும் பிரத்தியேகமாக இருக்கவேண்டும். இது தைமீ முதல் புதுப்பயிர் ஆரம்பிக்கும் வரையில் அந்தவருஷத்துக்குவேண்டிய உழுகருவிகள் விதைவகைகள், உழவுமாடு முதலியவைகள் தயாரிக்கப்பட வேண்டும் இவைகள் ஏழைகள் உழுங்காலத்தும் விதைக்குங்காலத்தும் பணக்காரரிடம் போய் கஷ்டப்பட்டு திண்டாடி அவர்கள் விதைத்த பிறகு முக்கால்வாசி பேர்கள் காலந்தவறி விதைப்பதால், உணவுப் பண்டங்கள் மிகவும் கிராக்கியாகின்றன காலத்தோடு பயிர் செய்ய வேண்டுமென்று குடிகளுக்கு யாராவது புத்திசொல்ல வருவார்களானால் இவ்வித ஸ்தாபனங்களில்லாமல் அவர்கள் சொல் விழலுக்கிறைத்த நீர் என்பதை விளங்குவதற்கு நான் முன்நிற்பேன். தவிர ஒவ்வொருவீட்டுக்கும் ஓர் கலமேனிக்கு எத்தனை குடும்பங்கள் இருக்கிறதோ அத்தனை கல நெல் பிரதி வருஷமும் அறுவடைகாலங்களில் வசூலித்து பொதுக் களஞ்சியத்தில் பஞ்ச நிவாரணத்திற்காக சேர்க்கப்படவேண்டும். புது வருஷத்தில் புது தானியங்களைச் சேர்த்துக்கொண்டு பழய தானியங்களை அவரவர்களுக்குக் கொடுத்துவிட வேண்டும். எதிர்கால லக்ஷியத்தைக்கோரி இரண்டு மூன்று வருஷம் பஞ்சம் நேரிடும் என்று தோன்றும் பக்ஷத்தில் 3-வருஷம் வரைக்கும் சேர்த்து வைக்கலாம். எவ்விதத்திலும் 5-வருஷத்திற்கு மேல் சேர்த்து வைக்கக் கூடாது. அவரவர்களுக்கு கொடுக்காமலும் நிறுத்தி வைத்திருக்கக்கூடாது; இடையில அவசரசம்பவங்கள் ஏதேனும் நடைபெற்று யாராவது அவர்கள் சொந்த தானியத்தைக் கேட்டால் கொடுத்துவிடவேண்டும். ஒரு படி தானியமும் எவ்வித செலவுக்காகவும் பிடித்துக் கொள்ளக்கூடாது.

கலப்பை முதலிய உழு கருவிகளும் தொலை முதலிய இறைக்கும் கருவிகளும் வேறு பல சாமான்களுக்சாக பொது பணத்தில் வாங்கி சேகரம் செய்யவேண்டும். அறுவடை காலங்களில் அதன் கிரயத்தை யாருக்கு உபகாரமாக கொடுக்கப்பட்டதோ அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்வது ஏழைஜனங்களுக்கு பேருதவியாகும் பொதுவாய் நாட்டில் தான்ய அபிவிருத்திக்கு இது முக்கியமான முறையாகும் இவைகளெல்லாம் ஒருவர் பண்ணையத்தாரென்னும் ஹோதாவில் ஒருபெரியகுடியானவராயுமிருக்க வேண்டும்: தவிர ஜவாப்தாரி யாயுமிருக்கும் அவர் மேற்பார்வை செய்யவேண்டும்.

பாதை, ஏரி, குளம், முதலியன :— ஸ்தாபனங்கள் 4-ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு பாதை செப்பனிடுவது ஏரி கரைகளை மராமத்து செய்வதும் கரை பலப்படும்படியான கோரை மரம் முதலியவைகளை விர்த்தி செய்யும் விஷயங்கள் கோடி, மதகு முதலியவைகளை புதிதாக கட்டுவது ரிப்பேர் செய்வது முதலிய வேலைகளையும், இரண்டு வருஷத்திற்கொரு முறை குளங்களை தூறு வாரி சுத்தம் செய்வதும், குளிப்பதற்கும், குடிஜலத்திற்கும் வெவ்வேறு குளங்கள் தயாரிப்பதுமான வேலைகளை உபாத்தியாயர்களில் இருவர் கவனித்து வர வேண்டும்.

தொழிற் ஸ்தாபனங்கள் 5 :— அந்தந்த கிராமத்திற்கு தக்கபடி என்னென்ன தொழிலாளிகள் வேண்டுமோ அவர்களை தயாரித்துக் கொள்வதிலும் தொழிலாளிகளின் காப்பு விஷயத்திலும்ஓர் உபாத்தியாயர் சிரமமெடுத்துக் கொள்ளவேண்டும். மனிதர்களின் வாழ்வெல்லாம் தொழிலாளிகளின் கையையே எதிர்பார்க்கப்படுகிறபடியால் அவர்களுக்கு போதுமான உதவிபுரிந்து காப்பாற்ற வேண்டும். தொழிலாளிகளை அடிமைகள் என்று எண்ணாமல் கடவுளால் ஏவப்பட்ட சிற்பிகள் என்றே துணியவேண்டும். தொழிலாளிகள் முதலாளிகளை பட்டினி கிடத்தமுடியும் ஆனால் முதலாளிகள் கிருபை கூர்ந்து தங்களுக்கு உணவுக்கு வழிதேடும் தொழிலாளிகளுக்கு போதுமானது வயிற்றுக்கிட்டு தாங்கள் சாப்பிடவேண்டும் தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை நான் இங்கு சொல்ல வேண்டிய காரணம் அதிகமில்லையாகையால் இதோடு நிறுத்திக் கொள்ளுகிறேன். எல்லா தொழிலாளிகளும் பயிரிடும் காலத்தில் தங்கள் தொழில்களை நிறுத்திக்கொண்டு பயிர் தொழிலாளிமளுக்கு உதவி செய்யவேண்டும் அது முடிந்த பிறகு தங்கள் வேலையில்மடுக்கலாம். அறுவடை காலங்களிலும் பள்ளிக்கூடத்தைகூட ஒவ்வொரு மாதம் நிறுத்தி

விடலாம். மற்ற சமயங்களில் கிராமங்களில் நீண்ட லீவு விட வேண்டியதில்லை. கீழ்தா உத்தியோகஸ்தர்களும் எவ்வளவு தூரம் பயிரிடுங்காலத்தில் அவர்களோடு சேர்ந்து உழைக்கலாமோ அவ்வளவும் செய்தே தீரவேண்டும். இப்படி செய்யாவிட்டால் குடிகள் பட்டபாடெல்லாம் வீண் பிரயத்தினமாகும். மற்ற விஷயங்கள் தொழில் காண்டத்தில் கூறப்படும்.

தர்ம ஸ்தாபனம் 6 :— கோவில், குளங்கள் தோப்பு துறவுகள் பூந்தோட்டங்கள், இயற்கைகாக்ஷிகள் முதலியவைகளை கவனிப்பதில் மற்றொரு உபாத்தியாயர் காலத்தை போக்கவேண்டும். விவரம் எதிர்பார்க்க கோருகிறேன்.

தொண்டர்கள். 7:—(1) கிராமத் தொண்டர்கள் அல்லது இச்சா சேவகர்கள் பஞ்சாயத்தாருக்கும் நிர்வாகத்தைச் செய்யும் பொது உபாத்தியாயர்களுக்கும் கோரிய உதவியைச்செய்வதுடன் கிராமத்து பொது நலங்களிலெல்லாம் ஈடுபட்டு உழைக்கவேண்டும் 2. தேசத் தொண்டர்கள்:- இவர்கள் சாதாரணமாய் படிக்கத் தெரிந்தவர்களாகவே யிருத்தல் வேண்டும். இவர்கள் தேச பொதுக் கா1யங்களில் சிரத்தை எடுத்து உழைக்கவேண்டும். ராஜாங்கத்துக்கு ஆபத்து நேரிடுங் காலத்து உதவி செய்யவேண்டும். இவர்கள் கிராமத்தில் 100-க்கு 5-பேர் விழுக்காடு தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இவர்களுக்குரிய விதிகளை பிறகு தெரிவிக்க முடியும்.

காட்டிலாகா 7 :—மனிதர்கள் குடியிருபபுக்கேற்ற வீடு தட்டுமுட்டு சாமான்வள் மிகவும் அவசியமாகையால் ஆதி காலத்து பெரிய மரங்களெல்லாம் அழிந்துபோய்விட்டபடியாலும்மரங்களை வளர்ப்பதிலே சிரத்தை யெடுத்துக்கொள்ளவேண்டும். ஆடு மாடுகளுக்கும் மழைக்கும் ஆதாரமாயுள்ள காட்டை பந்தோபஸ்து படுத்தி பாதுகாக்க வேண்டும். விறகுக்கு மாங்கள் வேண்டியதாயிருந்தால் இரண்டு மரங்களை வைத்துவிட்டு ஒரு மாம் இலவசமாகவே வெட்டிக்கொள்ளலாம். வெள்ளாடு காட்டில் மேய்ந்தால் காடு அழிந்துவிடும் என்றெண்ணுவது சுத்த மதியிலிகள் கூற்று வெள்ளாடு மேயாமல் ஓர் காடாவது செழித்து வளராதென்று நான் இப்பொழுது சொல்வேனானால் அதை சிலர் ஏளனம் செய்யலாம். ஆனால் அதைப்பற்றி பின்னர்கூறும் பல விஷகங்களால் குடிகளிடயிருந்து பணத்தைப் பிடுங்கவேண்டுமென்று எண்ணுகிறவர்கள் தவிர மற்றவர்கள் ஒத்துக்கொள்ளாம லிருக்க மாட்டார்கள். எடுத்துக்கொண்ட விஷயம் பொதுவாகையால் சுருக்கமாக முடிக்கிறேன்.

9. நியாய பரிபாலனங்களும் சட்டங்களும்:—பிறகு வரும்.

10. வயித்திய சுகாதாரமும் தபால்:—வயித்திய சாஸ்திரத்திலும் சுகாதாரத்திலும் பயின்ற ஓர்உபாத்தியாயர் ஒருவருக்கு ஒப்படைக்க வேண்டும். பள்ளிக்கூடத்தில் வயித்திய சிகிச்சையும் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். தபால்விஷயமாய் ஒரு வட்டத்துக்கொருபெட்டி யிருக்கவேண்டும். தபால் விஷயங்கள் ஒழுங்காய் நடைபெறுவதை மேல்பார்க்க ஒருவர் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

தொடரும்.

ஆத்மசக்தி.

முன் சஞ்சிகையில் தன்னைத்தானறியும் சக்தியைப்பற்றி சொல்லப்பட்டது. இச் சஞ்சிகையில் மனோதிட்பமுள்ளவனாகுதற்கு முதலாவதா ஒருவன் அனுஷ்டிக்கவேண்டிய விதிகளை கூறுமுன், ஆத்மசக்தியினால் அடையும் பலன்களை முதலில் சொல்லிய பின்னர்விளக்குவோம்.

ஆத்மசக்தி பெற்றவர்கள் பேய் பூதங்களுக்கும் பில்லி, சூன்யம், வைப்பு முறி முதலியவைகளுக்கும் உட்பட்டு வருத்தமடைய மாட்டார்கள். சகல நோய்களையும் மருந்தில்லாமலே சொஸ்திசெய்துகொள்ளலாம். வியாகூலம் தீராமனக்கவலை இவைகள் ஆதவனைக் கண்டபனிபோல் நீங்கிவிடும். இதில் சொல்லப்படும் மாந்திரீகத்தைக் கற்று மனப்பாடம் செய்தவர்களுக்கு, ஸ்திரீவசியம், தனவசியம் புருஷவசியமாவதுடன், புலி, சிங்கம் அடங்காதகுதிரைகள், யானை முதலிய மிருகங்களெல்லாம் வசியமாகும், பின்னர் சமஸ்த ஜனவசியம் தேவர்கள்வசியம் சித்திக்கும். இவ்வித சக்தியைப்பெற்றபின் நினைத்தகாரியமெல்லாம்; நீண்டஆயுள், மனோதந்தி கண் கட்டிமறைதல், ஜலத்தின்பேரில் நடத்தல், கூடுவிட்டு கூடுபாய்தல், அக்கினியில்நடத்தல் அல்லது மூழ்குதல் அவைகளெல்லாம் ஆத்மசக்தி பெற்றவர்களின் விளையாட்டுகளாகும்.

கல்வியில் கீழ்நிலைமையிலுள்ளவர்கள் கொஞ்சமாவது கற்றுக்கொண்டால் பயிர்தொழில்களில் அதிகலாபம் கிடைக்கும். வியாபாரிகள், உபாத்தியாயர்கள் வைத்தியர்களுக்கு ஏராளமான

லாபமும் மதிப்பும்உண்டாகும். இந்தமாந்திரீக சக்தியுள்ள உபாத்தியாயரைக் கண்டவுடன் பிள்ளைகளெல்லாம் உள்ளன்போடு நேசிப்பார்கள், அடங்கிநடப்பார்கள். பஞ்சாயத்தார்கள் இவைகளை வாசித்துவருவதினாலே மதிப்பும், கண்ணியமும், உண்மைவாதமும் சமரஸபுத்தியும்ஏற்பட்டு பிறரால் நன்குமதிக்கப்படுதுடன் சொல்லுக்கு மீறாமல் அடங்கி நடப்பார்கள். இப்படியே எல்லா தொழிலாளிகளுக்கும், வியாபாரிகளுக்கும் லாபமும் பெருமையும் உண்டாகும். இந்தசக்தியை அப்பியசித்துக்கொண்டே வருகிறவர்கள் அரிய பெரிய காரியமெலாம் நிறைவேற்றிவிடுவார்கள். இவ்விதமானஸ சக்திமான்கள் இத்தேசத்திலும் பல நாடுகளிலுமிருந்திருக்கிறார்கள் முன் தொகையினரைக்காட்டிலும், இப்பொழுது அதிகமாகவேயிருக்கின்றனர். இவ்வித மானஸ சக்தி பெற்றவர்களைப் பற்றிதான் தாயுமானசுவாமிகள் அடியில் கண்டவாறு பாடியுள்ளார்.

"கந்துகமதக்கரியை வசமாநடத்தலாங்
    கரடி வெம்புலி வாயையுங்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
    கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலில் நிரதம்வைத்தைந்து லோகத்தையும்
    வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர்காணும லுலகத்துலாவலாம்
    விண்ணவரை யேவல்கொளலாஞ்
சந்ததமுமிளமையோ டிருக்கலாம் மற்றொரு
    சரீரத்திலும் புகுதலாஞ்
சலமேனடக்கலாம் கனன்மேலிருக்கலாஞ்
    கன்னிகரி சித்திபெறலாஞ்
சிந்தையையடக்கியே சும்மாயிருக்கின்ற
    திறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட வறிவானதெய்வமே
    தேசோமயானந்தமே."

இனி இம் மாந்திரீகசத்தியை அப்பியாசிக்கவேண்டியவன் அனுஷ்டிக்கவேண்டிய முறைகளைப்பற்றி இனி கூறுவோம். தொ.

பெண்கள் பக்கம்.

1. உன் இல்வாழ்க்கையானது எக்காலத்தும் கடவுளாலும் பெரியோர்களாலும் ஆசீர்வதிக்குப்படும்படியாக மங்களகரமாகவும், சாந்தரூபியாகவும், பூமியிலும் அதிகப் பொறுமையுள்ளவளாகவும், வீட்டிற்கு அலங்காரமான லக்ஷ்மீ, சரஸ்வதி தேவதைகளாகவும் பிரகாசிக்கக் கடவாய்.

2. இம்மை மறுமைகளில் தோஷமுண்டாகாமல் உன்னைக் காத்துக்கொள்வதற்கு நீ எப்போதும் ஸதாசார ஸம்பன்னையாக விளங்குக. சுத்தம் சோறுபோடும், எச்சில் இரக்கவைக்கும்.

3. ஸதா பணிவிடை புரிவதற்கு நீ தயாராக இரு. எக்காலத்தும் எவருக்கும் அன்புள்ள சேவகியாகிநில். நீ ஜனித்த தேசத்துக்கும் ஒரு சேவகியாக நில். பணிவிடையில் எப்போதும் சிரத்தையாக நில. பிறருக்குவேண்டிய உதவிகள் செய்து ஆதரிக்கவே கடவுள் உன்னைப் பெண்மணியாகப் பூவகத்தில் தோற்றுவித்தார். பெண்மக்கள் உலகில் தோன்றியது எல்லோருக்கும் தாய்போல் இருந்து ஆதரிப்பதற்காகவாம்.

4. உன் கணவனுந் புன்னகை ததும்பிய வதனராய் விளங்கினால், அதுதான் உலகத்தில் பெறத்தக்க பாக்கியங்களுள் பெரிய பாக்கியம். அதற்கேற்றபடி உன் நடத்தையும் பொருந்தியிருக்கிறதா என்றுபார். மாமி, மாமன் முதலிய பெரியோர்களை மகிழ்விப்பதே உனது கணவனைத் திருப்திசெய்யும் மார்க்கமாம்.

5. நீ சிறுமியாய்த் தாய்வீட்டில் இருந்தபோது உன் ஆடல், பாடல், விளையாடல்களிலும் கெட்டபெயர் இல்லாமல் கவனமும் மரியாதையுள்ளவளுமாக நடந்து வழக்கப்பட்டால், அவ்வழக்கம் கணவன்வீட்டிலும் உனக்கு நல்லபெயரைத் தந்து மேன்மையைச் செய்யும்.

6. தாய் தந்தையருக்கு தான் புகுந்த வீட்டாரால் இகழ்ச்சியுண்டாக்கும் பெண் இவ்வுலகில் பிறவாமலே இறந்துவிடுவது உத்தமம். எவ்வளவுதான் உன் பெற்றோர்கள் ஐசுவரிய ஸம்பன்னராயினும் அதில் உனக்குக் கௌரவமில்லை. உன் கௌரவம் உன் கணவன்வீட்டுச் சிறப்பினால் ஏற்படவேண்டும். அவ்வீட்டிற்குச் சிறப்பு உன் நடத்தைகளால் அமையவேண்டும். புதுப்பெண் வீட்டிற்குவந்து வாழ்ந்தமனையும் உண்டு. புதுப்பெண் வீடுபுகுந்ததும், அவ்வீட்டில் ஒன்றாயிருந்த குடும்பம் பத்துத துண்டுகளால் அவளால்பிரிந்து பல பிரிவினைகள் கண்டு பாழ்பட்டதும் உண்டு. ஆக்குகிறதும் பெண்தான் அழிக்கிறதும் பெண்கைதான்.

தொடரும்.

சமரஸம்

என்னும்

நவீன தமிழ் மாதாந்தர பிரசுரம்.

தமிழ் பெருந்தகையீர்!

இப்பத்திரிகை ஏழைகளின் முன்னேற்றத்திற்காகவும் இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் குடியாசு கிராமாக்ஷிமுறை களில் பஞ்சாயத்து சட்டதிட்டங்களும். மணியம், கர்ணங்கள் அனுஷ்டிக்கவேண்டிய புதிய விவகார விஷயங்களும் இக்காலத் துக்கேற்ற யுகதர்மங்களடங்கிய, பிழைக்கும்வழி, வாழ்க்கை நலம் கல்வி, கைத்தொழில், சுகாதாரம் வைத்தியம், விவசாயம், வர்த்த மானம், ஸ்திரீ சிறுவர்களுக்கேற்ற பகுதிகள் சமரச சன்மார்க்க சதாசாரம், தேசியகீதங்கள் முதலிய வியாசங்களடங்கி வெளி யுலவும்· உபாத்தியாயர்கள் முன்னேற்றத்திற்கு இன்றியமை யாதது.

பிரதி மாதமும் முதல்தேதியிலிருந்து வெளிவரும் சில கார ணங்களை முன்னிட்டு முதல் சஞ்சிகையில் பிரசுரித்த சந்தாதுகை கைரத்துசெய்து 12-அணு வருஷசந்தாவாக ஏற்படுத்தப்பட்டி ருக்கிறது. எத்தனைபேர் அதிகமாய் சந்தா சேர்கிறார்களோ அதற்கு தக்கபடி பத்திரிகை மாதந்தோறும் சித்திரை படங்க ளோடு வெளிவரும். தபால்கூலியுள்பட வருடசந்தா அணு 12.

மாதிரிகாப்பி இனும்.

வேண்டுவோர் $\frac{1}{2}$-அணு ஸ்டாம்பு அனுப்பவும், வேறுவிபரம் வேண்டுவோர்கள் ரிப்ளைகார்ட்டாவது $\frac{1}{2}$-அணு ஸ்டாம்பாவது அடக்கம்செய்து கடிதம் அனுப்பவும்.

இடையில் சேருகிறவர்களுக்கு முதல் சஞ்சிகைகளை சேர்த்து அனுப்பப்படும்.

கவர்ன்மெண்ட் உத்திரவு வாங்குவதற்கு தவக்கப்பட்டதால் பத்திரிகை காலதாமதமாகி வரப்பட்டது. மன்னிக்கவும்.

எல்லாகடிதங்களும் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பவும்.

எம். ஏ. வரதராஜுமுதலியார்,

சமரஸம் ஆபீஸ்,

விழுப்புரம்.

80
5-JUL1926

ஓம்.

மாதிரிகாப்பி.

மிகப்புதியது எனினும் மிகப்பழையது.

சமரஸம்

என்னும்

சர்வசமய சமரஸ சன்மார்க்க சதாசாரம்.

அட்சயஹு ஆனிமீ முதற்கொண்டு வெளிவரும்

தமிழ் மாதாந்திர சஞ்சிகை.

EDITED BY

M. A. Varadaraja Mudaliar.

விழுப்புரம் ஹநுமான் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.
1926.

OFFICE OF THE
5

ஓம்

தத் ஸத்.

மெய்ப்பொருள் ஆகூஷி.

ச ம ர ஸ ம்.

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு — குறள்.

அன்பர்காள்!

நாம் வசிக்கும் இந்த உலகமானது அநேககோடி வருடங்களாக பழமைபெற்று விளங்குகின்றது எனினும் என்றும் புதிதாக இயற்கையமைப்பிலும் ஜனநாயக முறைமையிலும் நாகரீகத்திலும் மாற்றம்கொண்டு விளங்குகின்றது. பின்னும் இந்த உலகமானது ஆகாயத்தில் சுழலும் தனியான ஏகாங்கமாகிய இதர உலகங்களுடன் பிணைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படாமல் மற்ற உலகங்கள் இதற்கு அனுதாபமும் சகாயத்துவம் கொண்டதென கருதப்படுகின்றது. பூமியைக்காட்டிலும் பல்லாயிரம் மடங்கு பெரியனவும், சிறியனவுமாகி ஆகாசத்தில் சுழலும் கிரகங்கள், உபகிரகங்கள், நக்ஷத்திரங்கள், குறிமீன்கள் முதலிய பலவும் இப்பூமியின் க்ஷேமலாபங்களிலும், அழிவுகளிலும் ஈடுபட்டு உழைப்பதாக தோன்றப்படுகின்றன. இதுவன்றி ஒவ்வொரு அண்ட அடுக்குகளிலும் ஒவ்வொரு உலகங்களிலும் ஸ்தூல புத்திக்கெட்டாதவாறு பல அறிய காரியங்கள் தனியான முறையில் நடைபெறுவதாகவும் புலப்படுகின்றது. ஜகத்தின் அமைப்பு முழுவதும் ஈஸ்வர சங்கல்பம்.

காலமானது பல யுகங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன. பல யுகங்களிலும் சிறு யுகங்கள் தோன்றி மறைகின்றன. ஒவ்வொரு சிறு யுகங்களிலும் என்றும் மறக்கமுடியாத பல அரிய அம்ஸங்கள் நிறைவேறி செல்கின்றன. ஒவ்வொரு யுகங்களிலும், சிறு யுகங்களிலும், காலப்பிரிவினைகளிலும் நடைபெறவேண்டிய அம்ஸங்கள் பலவுக்கும் குறிப்புகள் ஆண்டவனின் சித்தத்திலுள்ளது. அஃது அங்ஙனமே நடைபெறம். ஒவ்வொரு யுகங்களுக்கும் ஒரே முறையான விதிகளல்லாமல் யுகங்கள் தோறும் சில அம்ஸங்கள் மாறிக்கொண்டே வருகின்றன. அந்தந்த யுகங்களில் நடைபெறுவன தர்மமும் தெய்வீகமாகவே யிருக்கின்றன. இவ்வாறு சங்கல்பங்கள் பல நிகழ்ச்சி பெறுவன உலக சரித்திரங்களுக்கு ஆதாரமாகின்றன. காலமென்பது ஒன்றன்பின் வொன்றாய் தொடர்ந்து வருவனவாய் அகண்ட பரிபூரணத்தன்மையுள்ள ஆண்டவனின் அருள்வடிவமான நூற்பாவு போன்றிருக்கின்றது.

கர்ஜித்துக் கொண்டிருக்கும் காலமென்னும் தரியிலே நான் பாவு வோட்டுகிறேன். அப்படி ஓட்டுவதில் எவைகளைக்கொண்டு இவர்தான் கடவுளென்று நீ அறிகிறாயோ, அப்படிப்பட்ட ஆடைகளை நான் அவருக்கு நெய்கிறேன் என்று ஒரு கவிராயர் எழுதுகிறார்.

சரித்திரங்களில் பல பாவங்கள் பலவாறு சொலப்படினும் அவற்றுள் மற்ற விஷயங்கள் போலவே லௌகீகம் வேறாகவும் பாரமார்த்திகம் வேறாகவும் விரோதப்படுகின்றன.

லௌகீக பாவப்படி உலகமானது ஒரு பெரிய இயந்திரமாகவும் சிருஷ்டியின் அசேதன சக்திகளே பரிணாம பலன்களுக்கு அபுத்தி பூர்வமான காரணங்களாகவும் கருதப்படுகின்றன.

பாரமார்த்திக பாவப்படி பிரபஞ்சம் ஒரு சேதன வஸ்து அதில் ஒவ்வொரு சக்தியும் ஒரு சேதன அமைப்பை திரைபோல் மறைத்து நிற்பது. படிப்படியாய் இடைவிடாமல் முன்னறிந்த நோக்கமொன்றை நிறைவேற்றும் பொருட்டு கற்பனை செய்தும் நடத்தியும் மாற்றியும் வருகின்றன.

இந்த பாவப்படி இந்த உலகமானது மனிதஜீவனது பரிணாம மாத்திரமல்ல மற்ற ஜீவர்களுக்கும் வஸ்துக்களுக்கும் பரிணாம க்ஷேத்திரமாயுள்ளது. அதில் நம் கண்ணுக்கு புலப்பட்டும் புலப்படாமலிருக்கும் பிராணிகள் தம்மிற்கலந்து ஒன்றிற்கொன்று சகாயமாயும் விரோதமாயும் உழைப்பன. இந்த பிரபஞ்சத்திலுள்ளதுபோலவே எல்லா உலகங்களிலுமுள்ள அதிருஷ்டமும் சூக்குமமான பிராணிகள் தம்மிற் கலந்து இப்பிரபஞ்சத்தின் நன்மைக்காக உழைப்பதாக தெரிகின்றது. * அதிமானுஷ்யப் பிராணிகளால் காக்கப்பட்டு உருவாக்கப்பட்டு நடத்தப்படுகின்றன. உலகத்தின் கற்பகோடி அளவினதான வேறுபாட்டினும், மனித ஜாதியின் சரித்திர போக்கிலும், ஏகாதிபத்தியங்கள் தோன்றி மறைவதிலும் ஜன சமூகங்கள் வளர்ந்து தேய்வதிலும் நிஷ்கரிஷையான சங்கல்பம் தோன்றுவதையறிந்து; ஜகத்தின் பரிணாமத்திற்கும் மனித ஜாதியின் சுதந்திரத்திற்கும் இந்த சங்கல்பம் விரோதமின்மையை உண்டுபண்ணுகிறதென்றும் ஞானத்தின் அர்த்த நிர்வாகத்தில் அஞ்ஞானம் பயன்படுவதையுணர்ந்து குறைவுள்ள அர்த்தங்களால் பூர்ணமான அர்த்தங்கள் விரியும்படி செய்து விதிபூர்வமாய் பரமசுகத்தை எட்டுகின்றதென்றும் கருதப்படுகின்றன.

ஜகத்தின் இயற்கையமைப்பு மிகவும் விந்தையானது. சேதன வஸ்துக்கள் அதாவது உயிருள்ள பிராணிகளின் ஜீவவுற்பத்தி

---

* மகாத்மாக்கள், பரமாத்மாக்கள்.

விற்பத்திக்கு உயிரற்ற அசேதன வஸ்துக்கள் ஆதாரமாயிருக்கின்றன. உயிரற்ற அசேதன வஸ்துக்களினின்றே ஒருயிர் பிராணிகள் ஜனிக்கின்றன. ஒருயிர் பிராணிகளினின்றே ஈருயிர் பிராணிகள் உண்டாகின்றன. இவ்வாறு முறையே ஐயுயிர் பிராணிகளான மனிதவர்க்கம் பரிணமிக்கின்றது. உயிருள்ள பிராணிகள் உருவமைப்பும் எண்ணிறந்தவைகளாய் உலவுகின்றன. அவைகள் 84 லக்ஷம்கோடி பேதங்களென சாஸ்த்ரம் கூறுகின்றது.

இவ்வாறு பலவிதமான சேதன வஸ்துக்களை சோதித்தறிவோமானால் உலகத்து சரித்திரங்கள் எவ்வாறு நடைபெறுகின்றனவென்பது சிறிது தெளிவாய் அறியக்கூடும். இந்த சேதன வஸ்துக்களை யறியாவிடில் அதின் செய்கைகள் நமக்கு தெளிவாய் புலப்படா. இந்த சேதன வஸ்துக்களே எல்லாவற்றையும் முற்றிலும் நிர்மாணிப்பதும், நடத்துவதும், மேல்நோக்குவதுமாயறிவோம். சில அதிமானுஷ்யராயும் சில மனுஷ்யராயும் சில நிர்மானுஷ்யராயும் உள்ளார்கள். எப்படி ஜன சமூகத்தின் உயர்ந்தோர் மற்றவர்களின் உதவியால் சில துறைகளில் புகுந்து சில காரியங்களைச் செய்கின்றனரோ, அப்படியே இந்த உயர்ந்தோரும் தாங்கள் சுவாதீனர்களாய் தங்கள் சக்தியினாலே தூண்டப்பட்டவர்களாய் வேலை செய்வதாக கருதினாலும் உண்மையாய் தம்மிலும் உயர்ந்தோராகிய சேதனப் பிராணிகளினது கையின் கருவிகளாய் ஒரு பெரும் சங்கல்பத்தின் அம்சங்களாயிருக்கின்றன. இந்த உலகமாகிய நாடக மேடையில் நடிக்கும் ஜனங்கத்தின் பின்புறத்தில் நின்று சமூகங்களுடைய காலகதியை கவனித்து நடத்துகிற சக்திமான்கள் உண்டென்பது சிலர்க்கு பொய்க்கின்றது. இந்த சக்திமான்கள் மானவர் கதியை கவலையுடன் மேனோக்கி அவர்களின் க்ஷேமத்தில் கருத்து வைத்துள்ளார். இவர்களில் பலமாதிரியான வகுப்புகளும் பல நோக்கங்களுமுண்டு; அவர்களுக்கு தனித்தனி வேலைகளுமுண்டு. ஒருவரை சமரஸப்படுத்தவேண்டிய பகுதியும் மேல்பார்வை நடத்தவேண்டியப்பகுதியுமுண்டு. எப்படி எஜமான் வேலையாட்களுக்கு இன்ன வேலையை இன்ன விதமாய் முடிக்கவேண்டுமென்று நியமிக்க வேலை ஆட்கள் தங்கள் திறமைக்கு தக்கபடி அவரவர் பங்கை ஏறவோ தாழவோ நிர்வகிக்கின்றாரோ! அப்படி மேற்கூறிய நிர்வாகிகள் ஒவ்வொருவரும் அவரவர்க்கேற்பட்ட எல்லைகளுக்கடங்கி அவரவர்கள் தனித்திறமையின்படி விவரங்களை பூர்த்திசெய்ய சுதந்திரம் பெற்றவராவர். விதிக்கு அடங்கிநடக்க கடமைப்பட்டவர்கள் சில நிபந்தனைகளை சுயேச்சையாக மாற்றிக்கொள்ள சக்தியுமுண்டு. இவ்வாறு ஜகத்தின் அமைப்பை நிறைவேற்றுவதில் உள் விவரங்களில் தவறுதல்கள் ஏற்பட்டபோதிலும், மொத்தத்தில் அது அதிசயமான அறிவுடன் கற்பிக்கப்பட்டு அதிசயமான புத்தியுடன் நடத்தப்படுகின்றது.

மனிதரும் மற்ற பிராணிகளும் அவரவர்களுக்குரிய வேலைகளை நடத்துவதில் தவறுதல்கள் செய்தாலும் அந்த தவறுதல்களால் அதை செய்தோருக்கு அறிவு அதிகப்பட்டு அவர்களுடைய திறமையும் விரிகின்றது. அந்த தவறுதல்களால் மற்றவர்களுக்குண்டாகும் அனுபவமும் தவறுதல்கள் செய்தோரால் மாறிப்போன சமநிலையை சரிப்படுத்த உபயோகப்படுகின்றது.

இவ்வாறு ஒருபுறம் தீயவண்மை மற்றொன்றால் வலிகுறைய நல்வண்மையானது தடையின்றி முன்சென்றுழைக்கிறது. இவ்வாறே மற்றொருபுறம் பிரபஞ்சமாகிய குடும்பத்தில் தாழ்ந்த ஊழியர்கள் செய்யும் தவறுதல்கள் பிரபஞ்சமுழுதும் சம்பூர்ணம் பெறுவதை தடைப்படுத்தினாலும் முழுமையும் விலக்கமுடியாமல் தவிர்க்கப்படுகின்றது. ஏனெனில் ஈஸ்வர சங்கற்பம் நிறைவேறுவதில் எதிர்கொண்டு அவரது சித்தத்தை குறுக்கிட யார் வல்லவராவர்! யுக கர்மங்களுக்கு ஏற்றவாறு எவ்வாறு தாழ்ந்த ஊழியர்களால் செய்யப்படும் தவறுதல்கள் அதிகரிக்காமல் மேலோர்களின் கோரிக்கையின்படியும் மனப்புழுக்கத்தின் பெருவெள்ளம் கடவுளின் கோபத்தை கிளர்ந்து அதனால் அழிக்கப்படுகிறார்கள். ஆகையால் ஸமரஸம் என்னும் இப்பத்திரிகையின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நேயர்களில் சிலர் ஐயுறுவார்கள்; சிலர் சந்தோஷிப்பர்; சிலர் நடுக்கங்கொள்வர்; சிலர் வாழ்த்து கூறுவர். சிறியோர், பெரியோர்; மேலோர், கீழோர்; தந்தை, தநயன், எஜமான், வேலைக்காரன், குரு சீடர்கள், உபகாரிகள், அபகாரிகள் என்கிற ஏற்றத்தாழ்வும் மதிப்பும் அற்று, எல்லாம் ஸமரஸமாகி விடவேண்டுமென்பதா? அன்று! அன்று!! அதற்காக இப்பத்திரிகை வெளிபோந்துவனவல்ல. பண்டை அந்தணரும், ஒழுக்கமும் மதிப்பும் ஆங்கிலரின் கூட்டுறவால் தலை தடுமாறி நிற்கின்றது. ஆங்கிலேயர் அவ்வாறு ஒழுக்கமற்றவர்களல்ல! அவர்கள் நடையுடைபாவனைகள் வேறு நமது ஒழுக்க வழக்கங்கள்வேறு. பலர் நம்மவரில் நம் ஒழுக்கங்களையும் விடுத்து ஆங்கில ஒழுக்கத்திலும் ஈடுபடாமல் தங்களை விகாரப்படுத்திக்கொள்கிறார்கள். நிற்க,

க்ஷத்திரிய தர்மங்கள் சமரஸ முறையில் நடைபெறல்வேண்டும்: கறுப்பர், வெள்ளையர் என நிறவேற்றுமை சிறிதுமன்னியில் எல்லா துரைகளிலும் சமரஸத்தை கோரவேண்டும். வைசிய தர்மத்தின் பெரும்போக்கை குறைக்கவேண்டும். உணவு, உடை என்னும் பொது விஷயங்களில் மாத்திரம் பணக்காரர்கள் ஏழ்மைகளுக்கும் கொடுத்தல்வேண்டும். மனித சமூகத்தில் தீண்டாமையென்னும் குஷ்டநோயை குணப்படுத்தவேண்டும். மேல்நாட்டாரைப்போல் இந்நாட்டாரும் சமத்துவம் பெறல்வேண்டும். தெய்வ வழிகளிலும், மதகோட்பாடுகளிலும் கூடியவரையில் சமரஸமான முறைகளை கையாடவேண்டும் என்றும் இவைபோன்ற விஷயங்

களை சமாஜ முறைக்கு கொண்டுவர பல பத்திரிகைகள் இப் பொறுப்பேற்று புநிதம் பெறுகின்றன. ஏனைய பத்திரிகைகளைப் போல் பலமான முறையில் பொதுநல ஊழியம் செய்ய பிந்தின போதிலும் நிர்பல முறையிலும் கூடியவாறு துண்டு பிரசுரங்கள் போலேனும் தொடர்ச்சியாக கொண்டுவந்து பொதுநல ஊழியத்தை ஆற்ற வேண்டுமென்பது எமது கோரிக்கை இதைக்கண்ணுறும் நேயர்கள் இதனை அம்பலத்தில் விடாமல் இது போதுமான மூலதனமில்லாமல் நடைபெறுவதால் முதலிலேயே சந்தாதுகையும், பொருளுதவியும் கொடுத்து காப்பாற்றுவார்களாக. இதற்கு எல்லாம் வல்ல முழுமுதற் பொருள், நீடித்த ஆயுள் பொருளுதவி அனுக்கிரகித்து காப்பாராக.

ஆத்மசக்தி.

இப்பிரபஞ்சத்தில் சகலரும் இச்சிப்பது சுகப்பிராப்தியும் துக்க நிவர்த்தியுமே. சுகப்பிராப்தியின் பொருட்டு ஸ்திரிதன புத்திராதிகளை பலர் விரும்புகிறார்கள். துக்க நிவர்த்தியின் பொருட்டு தான தருமங்களை சிலர் செய்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட எவ்வித முயற்சியாலும் துக்கமற்ற சுகம் கிடைக்கிறதில்லை. சகல துக்கங்களுக்கும் காரண மெதுவோ அது நீங்காமல் சுகம் உண்டாகமாட்டாது. சாந்தோக்கிய உப நிஷத்தில் அடியில் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது. ஒருகாலத்தில் நாரதர் சனத் குமாரரைப்பார்த்து ஸ்வாமி என்னை சோகமில்லாதவனுக்குமின் என்றார் அப்போது சனத்குமாரர் பிரமம் சோகமற்ற சுகரூபம்; அதற்கு வேறான தெல்லாம் துக்கம். அஞ்ஞானமும் அதன் காரியமாகிய ஜகத்தும் பிரமத்துக்குவேறாக யிருப்பதால், அவை துக்கரூபம் ஆகையால் அஞ்ஞானம் நிவர்த்தியாகாத வரையில் துக்கம் அடியோடு நிவர்த்தியாகமாட்டாது. இந்த அஞ்ஞானம் ஞானத்தில் நிவர்த்தியாகும். ஞானம் விசாரத்தால் உண்டாகிறது. நான் யார்? சுக துக்கங்கள் எப்படி யுண்டாயிற்று? என்னை சுற்றிலுமுள்ளவை எவை? சுக துக்கங்களுக்கு காரணம் என்ன? இவ்விதமான விசாரணைக்கு விசாரமென்று பெயர். இவ்வித விசாரமின்றியில் துக்கம் போகாது.

இவ்வித விசாரம் ஆதிகாலத்தில் எங்கும் பிரவிர்த்தி யதிகப்பட்டு பிறகு மலினப்பட்டு ஸ்வல்ப காலமாய் புத்திமான்களுடைய புத்தி மறுபடியும் அதில் பிரவிர்த்தித்து நம்பண்டை இருடிகளால் ஐரோப்பியரும் பரிசயம் பண்ணுகிறார்களெனில் நாம் நம்முடைய புத்திகளை அதில் செலுத்த வேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். ஆதலால் ஆத்மஞானம் அதாவது பிர்மஞானத்தை நாம் சம்பாதித்துக்கொள்வது உசிதம். பிர்ம ஞான விஷயத்தில் விசேஷமுயற்சி இப்போது காணப்படுவதற்கு காரணம், அம்முயற்சி

யின் பலன்களும் பிர்ம ஞானதத்துவங்களும் அதிப்படுவதே. இந்த பிர்ம ஞானமானது உபநிஷத்துக்கள் பிர்ம சூத்திரங்கள் இவைகளின் வியாக்கியானங்கள். இவைகளில் பிரதி பாதிக்கப்பட்டிருக்கிறது. இக்கிரந்தங்களில் கருத்துகள் வெவ்வேறு மதஸ்தர்களால் வெவ்வேறு விதமாய் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்போது எங்கும் அத்வைத விசாரமே விசேஷமாயிருப்பதால் அதின்படி வேதாந்த சுருக்கம் யாதெனில் சச்சிதானந்த ஸ்வரூபமாயும், அகண்டா காசமாயும், சுயம் பிரகாசமாயும், அசங்கமாயுமிருப்பது பிர்மம். இது சுத்தமாயிருப்பதால் ஜகத்து முதலியவைகளுக்கு காரணமன்று இந்த சுத்த சேதனத்தை மாயை என்னும் சக்தி ஆசிரியித்துக் கொண்டிருக்கிறது இது அனாதியாயும், ஏகமாயும் ஞானத்தால் நாசமாவதாயும் சத் சத்துகளுக்கு விலக்ஷணமாயும் இருக்கிறது. இந்த சக்திக்கு சத்வம் ரஜஸ், தமஸ்யென முக்குணங்கள் உண்டு. சுத்த சத்வகுணத்தில் பிரதி பிம்பி தன் ஈஸ்வரன் ஈஸ்வரனே ஜகத்காரணம். இந்த ஈஸ்வரன் சர்வஞ்ஞன், சர்வ சக்திமான், ஸ்வதந்திரன், வியாபிகன், நித்தியன், மலின சத்வ குணத்தில் பிரதி பிம்பிதன் ஜீவன் அநேக பாத்திரங்களிலுள்ள ஜலத்தில் பிரதி பிம்பிக்கும் சூரியன் ஒன்றானாலும் பிரதி பிம்பங்கள் அநேகமாய் தோன்றுவதுபோல் அநேக அந்தக்கரணங்களில் பிரதி பிம்பிக்கும் சேதனம் ஒன்றானாலும், அந்தக்கரணங்களாகிய உபாதிகளில் உண்டாகும். பிரதி பிம்பங்களாகிய ஜீவர்கள் அநேகம். எந்த அந்தக்கரணத்தால் அஞ்ஞானம் இருக்கிறதோ அந்த அந்தக்கரணத்துடன் கூடிய ஜீவனுக்கு பந்தமுண்டாகிறது. ஜீவன் புண்ணிய பாவங்களைசெய்து சுக துக்கங்களை அனுபவித்து ஜனன மரணாதி சம்சார சாகரத்தில் உருளுகிறான். ஜீவனுக்குண்டான அஞ்ஞானம் ஞானத்தால் நிவர்த்தியாகும்போது முக்தனாகிறான். மாயையின் தமோகுணம் சத்தினின்றும் ஆகாசாதிகள் சிருஷ்டி யுண்டாகும்.

பத்திரிகையின் அவசியம்.

பத்திரிகையானது ஒரு மனிதனோ பல மனிதரோ பல விஷயங்களைப்பற்றி பல்லாயிரம் மனுஷ்யருக்குள் சம்பாஷிப்பதற்கும் போதிப்பதற்கும் இன்றியமையாக் கருவியாயுள்ளது. பிரசங்கத்தினால் ஒரு முறை பிரசங்கித்த விஷயங்கள் அது முடிந்தவுடனே அவ்விஷயங்களில் சில அம்சங்கள் தவிர பெரிது பல மறந்துவிடுகின்றனர். சில தினங்கள் செல்லச் செல்ல மனதிற் பதிந்த அச்சிறுபான்மையும் இழுக்குடைமை யாகிவிடும். ஆயின் பத்திரிகையோவென்றால் ஓர் முறை மட்டுமல்ல பன்முறையும் வாசித்தறிந்து கொள்ளலாம். மேனாடாகிய அமெரிக்கா ஐரோப்பா நாட்டினர்களில் சிறுபான்மையும் பத்திரிகை வாங்கி வாசியாதவர்கள் இல்லை

என்றே சொல்லலாம். அவர்களெல்லநம் மிக்க வித்வ வல்லுனர்களாகும். ஆங்கு இரக்கும் மக்கள் கூட பத்திரிகைகளை வாங்கி வாசிக்கின்றார்களென்றால் மற்றவர்களின் கல்வி எழுச்சியின் மணம் றாகத்தக்கதன்றோ? அவர்கள் நம்மனோரைப்போல் காலப்போக்குக்கும் மனமகிழ்ச்சிக்காக வேடிக்கைவினோதமான கதைகளை வாசிப்பதில் சிந்தை செலுத்தாமல் தாங்கள் கற்பது தங்கள் தாய்நாட்டு க்ஷேமத்தின் பொருட்டு என்றும் பத்திரிகைகள் தாய்நாட்டு சுபங்களைக் கோரியே என்றும் நன்குணர்ந்திருக்கின்றனர். அவற்றில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் தங்கள் செல்வத்திற்கும் சிறப்பிற்கும் நாகரீகத்திற்கும் உற்ற துணை என்று கூறுகின்றனர். வாசிப்பதல்லாமல் அதில் தோன்றும் முக்கிய விஷயங்களை அவர்கள் மதித்து ஆற்றல்வேண்டும் என்றும் சட்டமும் தீர்மானிப்பர். அக்கணமே அவ்விஷயத்தை செய்கை முகத்து காண்பித்து அனுபவத்தால் மகிழ்ச்சி யுறுவர். தன்னயங் கருதாது பிறர் நலங் கருதி ஒவ்வொருவரும் உழைக்கத் தலைப்படுகின்றனர். நிச்சயமாகவே அவர்கள் ஏதேனுமோர் புது விஷயம் தங்களுக்கு நன்மை பயக்க கூடியதாயிருப்பின் அவ்விஷயங்களை செய்கையில் பூர்த்தி செய்யக் கூடிய சக்திக்கு மேல் தங்கள் மனமாற்றலை காட்டிவிடுவார்கள் சோம்பிணிகளாய்க் காலத்தைக் கழிக்காது உயிரே போல் போற்றுவார்கள். ஓர் சிலர் ஓர் விஷயத்தைச் சிறப்பாக செய்வார்களானால் பலருப் அங்நிமிடமே 'அத்தேயமெங்கும் பாவுமாறு தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் பிறருக்கு அர்ப்பணம் செய்வார்கள் எவ்வளவு தூரம் ஒரு விஷயத்தை முடிக்க நினைத்தார்களோ அதைவிட இடமடங்கு செய்து காட்டுவார்கள், எத்தனைவித காரிய பேதங்கள் தோற்றினும் அமைதியுடனும் பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் தங்கள் விஷயத்தை பலருக்கு விளக்கிக் காட்டுவதிலும் அல்லது தங்கள் விஷயம் தவறெனக் கொண்டபொழுது வீம்புக்கு வேட்டையாடாமல் தவறென ஒப்புக்கொள்வார்கள் தங்கள் எதிரிகளின் கொள்கைகள் பொதுஜன நன்மை யென உணர்ந்த பொழுது எதிரிகளின் கக்ஷிகளை வீழ்த்தித் தள்ள முயலாமல் அதை தாம் ஒப்புக்கொள்வதோடு தாமும் ஒழுகுவர். தனிப்பட்ட விஷயங்களில் ஒருவருக் கொருவர் சில்லரை மனஸ்தாபங்கள் இருந்தபோதிலும் தாய் நாட்டிற்குப் பயன் விளைவிக்கும் விஷயங்களில் ஒன்று பட்டு உழைத்து வந்திருப்பதே அவர்களின் முன்னேற்றத்திற்கும் பிற்பலவற்றிற்கும் சான்றாகும் ஒருவருக்கொருவர் மனஸ்தாபங்கள் நேரிடுவது இயற்கையென்றும் அதனால் பொது நலனுக்கு பங்கங்கள் விளைவிப்பது அறிவிலிகள் கூற்று எங்பதையும் நன்குணர்ந்தவர்கள்.

(தொடரும்)

வர்த்தமானங்கள்.

சமீபத்தில் பாரஸீக அரசர்க்கு முடிசூட்டு வைபவம் மிகவும் விமரிசையாக நடைபெற்றது. ஆங்கு உலகத்தினின்றும் பல பிரமுகர்கள் அக்கோலத்தை தரிசிப்பதற்காக சென்றிருந்தனர்.

∴

சென்ற மாதம் நமது ராஜப்பிரதிநிதி தம்பதிகளோடு (லார்ட் ரீடிங் லேடி ரீடிங்) இந்தியாவை விட்டு லண்டன்மாநகரம் புகுந்தனர். அவர்களுக்குப்பதிலாக லார்ட் இர்வின், லேடி இர்வின் என்றும் புதிய ராஜப்பிரதிநிதி தம்பதிகள் டெல்லிமாநகரம் வந்து இந்திய அரசியலை கைக்கொண்டுள்ளார்கள்.

∴

ஜர்மனி தேசத்திலுள்ள பெர்லின் நகரத்தில் மிஸ்டர் ஜோலி என்பவர் 44 நாள் உண்ணு விரதமிருந்தாராம். உலகத்தில் அதிக நாள் உண்ணு விரதமிருந்தவர்களில் முதல்வராகக் கருதி அவர்க்கு 8000 பவுன் இனமளித்தனராம்.

∴

டாக்டர் பெசண்ட் அம்மையார் இங்கிலாந்து சென்று சுய ஆட்சி மசோதாவுக்கும், இந்திய தொழிலாளர் சம்பந்தமாகவும் உழைப்பதற்காக சென்னைமாநகரமிருந்து புரப்பட்டு விட்டார்.

∴

கட்டாயக்கல்வி ஆரம்பத்திற்காக பம்பாய் நகரசபையார் 17 லக்ஷம் ரூபாய்கள் செலவுதிட்டம் செய்திருக்கிறார்கள்.

∴

சமீபத்திலடித்த புயலினல் ஜப்பானிய கப்பல் திசை மாறி போய்விட்டதாகவும் 230 பேரைக்காணேமென்று தேடிக்கொண்டிருப்பதாக தெரிகிறது.

∴

ஒரு பெரிய உபகாரி.

தென்னூற்காடுஜில்லா T. S. சொக்கலிங்கஉடையார் மிராசுதார் செம்பியமாதேவி வரையில்லாது கொடுக்கும் வள்ளலாவர். அவர் சரித்திரம் சமரஸம் ஆபீஸில் வெளிவரும்.

சமரஸம்.

மாதாந்த இரண்டு பிரசுரம் அக்ஷய ௵ ஆனி ௴ முதற் கொண்டு வெளிவரும்!

இப்பத்திரிகை ஏழைகளின் முன்னேற்றத்திற்காகவும் இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் குடியரசு கிராமாக்ஷிமுறைகளில் பஞ்சாயத்து சட்டதிட்டங்களும். மணியம், கர்ணங்கள் அனுஷ்டிக்கவேண்டிய புதிய விவகார விஷயங்களும் இக்காலத்துக்கேற்ற யுகதர்மங்களடங்கிய, பிழைக்கும் வழி, வாழ்க்கை நலம் கல்வி, கைத்தொழில், சுகாதாரம் வைத்தியம், விவசாயம், வர்த்தமானம், ஸ்திரீ, சிறுவர்களுக்கேற்ற பகுதிகள் சமரச சன்மார்க்க சதாசாரம், தேசிய கீதங்கள் முதலிய வியாசங்களடங்கி வெளியுலவும்.

சந்தாதாரரைச் சேர்க்கும் பொருட்டே முதலில் சந்தா தொகை. 8, அணாவாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சர்விஸ் சிலவு 2.அணா, பிரத்தியேகம். சர்விஸ் சிலவு டவுன்களுக்குமட்டில் கிடையாது. ஆனால் 2, 3. மாதங்களுக்குள் பணம்கட்டத் தவறினால் சர்விஸ் சிலவோடு வசூல் செய்யவேண்டியதாமுறை ஏஜண்டு மூலயமாய் பத்திரிகைகள் அனுப்பப்படும். இல்லாவிட்டால் தபால் சிலவு வி. பி. சிலவுமே 8 அணா, ஆகிவிடும். தயைசெய்து ஏஜெண்டிடம் சந்தா முதலிலேயே செலுத்திவிட்டு ரசீது பெற்றுக் கொள்ளவும்.

சீக்கிரம் சந்தா கட்டிவிட்டால் பத்திரிகை இருமடங்காக்குவதற்கு சௌகர்யம் ஏற்படும்.

இங்ஙனம்

தங்களன்புள்ள ஊழியன்

M. A. வரதராஜன்

சமரஸம் ஆபீஸ், விழுப்புரம்.